සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| බෞද්ධ ශිෂ්ටාචාරය I<br>பௌத்த நாகரிகம் I<br>Buddhist Civilization I | 45 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. மகா பிரம்மாவினால் வர்ண பேதத்துடன் கூடிய மனிதவர்க்கம் படைக்கப்பட்டதாக வைதிக இலக்கியம் குறிப்பிடுகின்றது. இதில் நான்கு வகை வர்ணங்கள் படைக்கப்பட்ட முறையாகக் கருதப்படுவது
   (1) குண கர்ம விபாகம் (2) நியதிவாதம் (3) பரிணாம வாதம்
   (4) காரணகாரிய வாதம் (5) அஹேது அப்ரத்யய வாதம்

2. பின்வருவனவற்றுள் எது வைதிக இலக்கியத்தின்படி பிராமண வர்ணத்திற்கு **உரியதல்லாத** ஸ்வதர்மத்தைக் கொண்டது?
   (1) கல்வி, யாகம் செய்தல், யாகம் செய்வித்தல் (2) கல்வி, தர்மம் செய்தல், ஆட்சியாளரை அறிவுறுத்தல்
   (3) கல்வி, கற்பித்தல், யாகம் செய்தல் (4) கல்வி, யாகம் செய்தல், விவசாயம்
   (5) கல்வி, யாகம் செய்வித்தல், ஆட்சியாளரை அறிவுறுத்தல்

3. பிராமண போதனைகளின்படி பல்வேறுபட்ட சட்ட ஒழுங்கு விதிகள் ஊடாக பெண் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டதாக அடிப்படையான தகவல்கள் மூலம் தெளிவாகின்றது. அதன்படி மனைவி தனது கடமைகளை சம்பிரதாயபூர்வமாக நிறைவேற்றுவதன் மூலம் தனது கணவனை கௌரவமாகவும் திருப்தியாகவும் பேணவேண்டும். பிராமண சம்பிரதாயங்களுக்கு அமைவாக மனைவி கணவனுக்கு அளிக்க வேண்டிய மிக உயர்ந்த கௌரவமாகக் கருதப்பட்டது,
   (1) கணவனின் தாய் தந்தையரை நன்கு பராமரித்தல்
   (2) குழந்தைகளினதும் வீட்டினதும் சகல நடவடிக்கைகளையும் செவ்வனே நிறைவேற்றுதல்
   (3) கணவர் அவரது எண்ணங்களைக் குறைவின்றி நிறைவேற்றிக் கொள்வதற்கு இடமளித்தல்
   (4) கணவன் இறந்த பின்னர் விவாகம் செய்யாது மூத்த மகனின் பராமரிப்பில் வாழ்தல்
   (5) கணவன் இறந்த பின்னர் வாராந்த பூஜைகளை மேற்கொள்ளல்

4. "பெரும்பாலான பிராணிகளின் தீமைக்கும் துன்பத்திற்கும் வீழ்ச்சிக்கும் காரணமாகும் மனித தூண்டில்" என புத்தரின் விமர்சனத்துக்குட்பட்ட புத்தர் காலத்து பிரபலமான இந்திய போதனையாளர்
   (1) பூரண கஸ்ஸப (2) மக்கலீ கோசால (3) அஜித கேசகம்பல
   (4) பகுத கச்சாயன (5) ஸஞ்சய பெல்லட்டிபுத்த

5. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் நடைமுறையிலிருந்த சமய, தத்துவ போதனைகள் முக்கியமாக பிராமண, சமண எனும் இரண்டு பிரிவினுள் உள்ளடக்கப்படலாம். சுருதி, பிடக மரபு, நம்பிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கர்ம மார்க்கத்திற்குட்பட்ட பிராமணீய போதனைகள் சமணர்களின் கண்டனத்திற்குள்ளாயின. இருப்பினும் பிராமணர் கடும் நம்பிக்கை வைத்திருந்ததொரு விடயமாக இனங்காணக்கூடியது,
   (1) உலோகாயத வாதம் (2) காரணகாரிய வாதம் (3) புப்பேகதஹேது வாதம்
   (4) நியதி வாதம் (5) ஈஸ்வர நிர்மாண வாதம்

6. புத்தர் கால இந்தியாவில் நிலவிய குடியரசு இராச்சியங்களிடையே கண தந்திர நிர்வாகம் நடைமுறையிலிருந்த இரண்டு இராச்சியங்களாக இனங்காணப்படக்கூடியவை
   (1) வஜ்ஜி, மகத இராச்சியங்கள் (2) வஜ்ஜி, கோசல இராச்சியங்கள்
   (3) வஜ்ஜி, மல்ல இராச்சியங்கள் (4) வஜ்ஜி, காசி இராச்சியங்கள்
   (5) வஜ்ஜி, அவந்தி இராச்சியங்கள்

7. காரணகாரிய வாதத்தின் அடிப்படையில் சமூகம் படிப்படியாக பரிணாம வளர்ச்சியுற்றது என்பது பௌத்த போதனையாகும். இவ்வாறு கூறப்படும் சந்தர்ப்பத்துள் பொருளாதார, அரசியல், சமய, குடும்ப, சமூக, கூட்டுறவு தோற்றம் பெற்றது,
   (1) தனிப்பட்ட சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு எடுத்த கடும் முயற்சியின் பயனாகவாகும்.
   (2) தனிப்பட்டோருக்கிடையிலான உறவுமுறை இல்லாது போனமையினாலாகும்.
   (3) தனிப்பட்டோரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளின் பயனாகவாகும்.
   (4) தனிப்பட்டோர் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முற்பட்டதன் விளைவாகவாகும்.
   (5) நிர்மாணவாதக் கொள்கையை அப்புறப்படுத்தியதன் விளைவாகவாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


8. பௌத்த போதனைகளுள் பொதுவாகப் பயன்படுத்தப்படும் அத்தகார, பரகார, ஆரம்பதாது, நிக்கமதாது, பரக்கம தாது, தாம தாது முதலான பரிபாஷைச் சொற்களினால் உறுதிப்படுத்தப்படுவது, ஒருவரின்
(1) பொறுப்பாகும். (2) குணவியல்புகளாகும். (3) கடமைகளாகும்.
(4) நற்பண்புகளாகும். (5) வல்லமைகளாகும்.

9. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் பலவித தத்துவ வாதங்கள் பரவிக் கிடந்தன. ஈஸ்வர நிர்மாண வாதம், நியதி வாதம், புப்பேகதஹேது வாதம், அதிச்ச சமுப்பன்ன வாதம் என்பன அவற்றுள் முக்கியமானவை. இந்தப் போதனைகள் பிரதானமாக ஒருவரின் சுயாதீனத்தையும் பொறுப்பையும்
(1) அர்த்தமுடையதாக்கும். (2) பலவீனமாக்கும். (3) அவருக்கே உரியதாக்கும்.
(4) விவரணம் செய்யும். (5) எவ்வித செல்வாக்குக்கும் உட்படுத்தாது.

10. பௌத்த ஆட்சியாளன் தனது ஆட்சிக் கொள்கையில் “தர்மமற்ற செயல்களுக்கு இடமளிக்கலாகாது” என்பது முக்கிய பௌத்த அரசியல் சித்தாந்தமாகும். இந்தப் போதனையை உள்ளடக்கிய பௌத்த அரசியல் மூலதர்மமாவது,
(1) ஸதர அகதி (2) பஞ்சசீலம் (3) ஸப்த அபரிஹானிய தர்மம்
(4) தசராஜ தர்மம் (5) தச சக்விதிவத

11. நாட்டின் மரபுரீதியான அம்சங்களை அப்புறப்படுத்தாது அவற்றைப் பாதுகாப்பது ஜனநாயக ஆட்சிமுறையொன்றில் காணப்பட வேண்டிய முக்கியமானதொரு அம்சமாகும். அத்தகைய ஆட்சி முறையை ஊக்குவிக்கும் முக்கியமான பௌத்த ஆட்சிக் கொள்கையினைக் கொண்ட மூலாதாரமாவது,
(1) கூடதந்த சூத்திரம் (2) சக்கவத்தி ஸீஹநாத சூத்திரம் (3) ஜாதக பாளி
(4) அக்கஞ்ஞ சூத்திரம் (5) மஹா பரிநிப்பாண சூத்திரம்

12. பிக்கு - பிக்குணி, உபாசக - உபாசிகை என்பன புத்த சமயத்தில் காணப்படும் நால்வகை சிஷ்யக் குழுக்களாகும். சாதாரண மனிதர்கள், துறவிகள் ஆகிய இரு பகுதிகளிலுமே புத்தரின் சிஷ்யர்கள் உள்ளனர். ஆர்ய சிஷ்ய பிரிவினர் என்போரும் புத்தரின் விசேட சிஷ்யக் குழுவினராவர். பௌத்த போதனைப்படி ஆர்ய சிஷ்யர்கள்
(1) பிக்கு - பிக்குணி குழுவினரிடையே மட்டும் இருக்க முடியும்.
(2) உபாசக - உபாசிகை குழுவினரிடையே மட்டும் இருக்க முடியும்.
(3) நான்கு பிரிவினருள்ளும் இருக்க முடியும்.
(4) மார்க்க பயன் பெறும் சிஷ்யர்களிடையே மட்டும் இருக்க முடியும்.
(5) மார்க்க பயன்களுக்குட்படாத சிஷ்யர்களிடையே மட்டும் இருக்க முடியும்.

13. ஸிகாலோவாத சூத்திரத்திலுள்ள கடமைகள், பொறுப்புகளுக்கு அமைவாக முதலிலேயே துயில் எழுதலும் இறுதியாக நித்திரைக்கு போதலும்
(1) வேலையாட்களின் கடமையாகும். (2) பிள்ளைகளின் கடமையாகும்.
(3) மனைவியின் கடமையாகும். (4) மாணவர்களின் கடமையாகும்.
(5) பெற்றோர்களின் கடமையாகும்.

14. “மனிதனுக்கோ எறும்பு போன்ற பிராணிகளுக்கோகூடத் துன்பம் விளைவிக்காத உண்மை பௌத்தன், எக்காரணம் கொண்டும் மற்றவருக்குரிய பொருட்களில் பேராசை கொள்ளான். நாட்டுச் சட்டத்திற்கும் சமூக அறத்துக்கும் மதிப்பளிக்கும் அவன் பண்பான எல்லைக்குள் நின்று திருப்திகரமானதும் சந்தோஷமானதுமான குடும்ப வாழ்வை அனுபவிப்பான். குடும்பத்திலும் சமூகத்திலும் சமாதானத்தையும் அமைதியையும் பேணி ஒவ்வொருவரதும் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி நல்வாழ்வு வாழ்வான். அவன் சுகபோகியாகச் செயற்பட்டாலும் காமம், மது அல்லது வேறு எதனாலும் கெட்ட இயல்புடையவனாக இருக்க மாட்டான்.” இப் பந்தியின்படி விளக்கப்படுவது யாதெனில் உண்மை பௌத்தனானவன்,
(1) நாட்டுச் சட்டத்திற்கும் சமூக நற்பண்புக்கும் மதிப்பளிக்கும் வகையில் வாழ்வான் என்பதாகும்.
(2) காம வசப்பட்டு செயற்பட மாட்டான் என்பதாகும்.
(3) பன்சில்லைப் பாதுகாப்பான் என்பதாகும்.
(4) வெற்றிகரமான திருமண வாழ்வைக் கொண்டு நடத்துவான் என்பதாகும்.
(5) நான்கு தீய குணங்களிலிருந்தும் விலகி நடப்பான் என்பதாகும்.

15. “சகல பிராணிகளுமே தண்டனையையோ மரணத்தையோ விரும்புவதில்லை. அதற்குப் பயப்படுகின்றன. அவை வாழ்வதற்கு விரும்புபவை. துன்பத்தை வெறுப்பதுடன் சுகத்தை விரும்புபவை. ஆகவே தம்மைப் பற்றிய சிந்தனையுடன் மற்றவர்களை துன்புறுத்தக் கூடாது. கொல்லக் கூடாது.” இந்த பௌத்த போதனையை எவ்வாறு அழைப்பர்?
(1) அத்துக்கங்ஸன தர்ம பர்யாய (2) அத்துபனாயிக தர்ம பர்யாய
(3) அத்தாதிபதி தர்ம பர்யாய (4) அத்துத்தேஸிக தர்ம பர்யாய
(5) அத்துபக்கம தர்ம பர்யாய

16. பத்து வகையான நற்பண்புகளில் ஈடுபடுதல் என்பது உடலினாலோ பேச்சினாலோ மனத்தினாலோ செய்யப்படும் பத்து வித தீயசெயல்களிலிருந்து விடுபட்டுச் செயற்படுதலாகும். பத்து தீயசெயல்களிலிருந்து விலகிச் செயற்படும் போது உடல் ரீதியாகவும் பேச்சு ரீதியாகவும் தீயசெயல்கள்,
(1) மூன்றிலிருந்து விடுபட வேண்டும். (2) நான்கிலிருந்து விடுபட வேண்டும்.
(3) ஐந்திலிருந்து விடுபட வேண்டும். (4) ஆறிலிருந்து விடுபட வேண்டும்.
(5) ஏழிலிருந்து விடுபட வேண்டும்.

[பக். 3 ஐப் பார்க்க
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

17. கிராமத்தில் மரணப் பணிக்கொடைச் சங்கம், இறந்த தமது உறுப்பினர்களுக்குப் புண்ணியம் சேர்ப்பதற்காகத் தர்ம போதனை ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. இளைஞர் மேளவாத்தியங்களோடு போதனையாளரைக் கௌரவமாக அழைத்து வந்தனர். பின்னர் முறைப்படி பாதங்களைக் கழுவி வெற்றிலை, பானம் என்பன அளித்தனர். அவரும் ஐந்து போதனைகளை மேற்கொண்ட பின்னர் பத்துப் புண்ணிய செயல்கள் பற்றிய பயனுள்ள போதனையை நிகழ்த்தினார். இதனை எல்லோரும் காரணகாரிய பயனில் நம்பிக்கையுடன் நன்கு கேட்டனர். இறுதியாக பக்தர்கள் இறந்தவருக்கு புண்ணியத்தை அளித்து நீர் தெளித்து சாது, சாது எனக்கூறி நிறைவு செய்தார்கள். இப்பந்தியின்படி இப்புண்ணிய காரியத்தில் கலந்து கொண்ட பக்தர்கள் பத்து புண்ணிய செயல்களில்,
(1) ஆறினைச் செய்தார்கள். (2) ஏழினைச் செய்தார்கள். (3) எட்டினைச் செய்தார்கள்.
(4) ஒன்பதைச் செய்தார்கள். (5) பத்தையும் செய்தார்கள்.

18. அதிபதி தர்ம அல்லது ஆதிபத்யேய தர்ம என்பதனால் சுட்டப்படுவது,
(1) விகாரையை நிர்வகிப்பது பற்றிய கொள்கையாகும்.
(2) அரச நிர்வாகம் பற்றிய கொள்கையாகும்.
(3) நிர்வானத்தை விரும்பும் மார்க்கம் பற்றிய கொள்கையாகும்.
(4) வீட்டை நிர்வகிப்பது பற்றிய கொள்கையாகும்.
(5) ஒழுக்கவியல் நியமங்கள் பற்றிய கொள்கையாகும்.

19. 'ஆகாரவதீ' எனும் பரிபாஷைச் சொல் எதனைத் தெளிவுபடுத்தப் பயன்படுத்தப்படும்?
(1) நம்பிக்கை (2) பயபக்தி
(3) கடுமையான பற்றுதல் (4) விளங்கிக்கொள்வதனால் ஏற்படும் நம்பிக்கையை எடுத்துக்காட்டல்
(5) தவறின்றிச் சரியாகவே இருத்தலை விளக்குதல்

20. பொற்காசு மழையினால்கூடத் திருப்தியடையாத ஒருவர் ஆசைக்கு அடிமையாகிறார். அவருக்கு வாழ்வில் எப்போதும் குறைபாடு இருக்கும். ஆகவே அரசர்களும் வேறு பல மனிதர்களும் திருப்தியடையாத மனதையும் தணியாத ஆசையையும் கொண்டவர்களாக இறப்பின் போது உடலை விட்டுச்செல்கின்றனர். ஆசை என்பது பூரணமாகத் திருப்திப்படுத்தப்பட முடியாததொன்று. ஆகவே ஆசைகளையன்றித் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் எனப் புத்த மதம் போதிக்கின்றது. ஆகவே பௌதிக செல்வங்களை அனுபவித்தலோ புலன்வழி இன்பங்களை நுகர்தலோ ஒரு சந்தோஷமான கிருஹஸ்தனைப் பொறுத்தவரையில் தவறானவையல்ல. கிருஹஸ்த நிலையில் இந்த முரண்பாட்டு நிலைகளைச் சமப்படுத்தி வெற்றிகரமான வாழ்வை நடாத்துவதற்காக,
(1) கிடைத்ததைக் கொண்டு திருப்தியுறும் குணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
(2) செல்வத்தை ஈட்டுதலையும் நுகர்வதையும் வரையறை செய்ய வேண்டும்.
(3) முடியுமான அளவு தியாக மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்.
(4) பௌதிக செல்வங்களைக் கைவிட்டு நிர்வாண மார்க்கத்தில் ஈடுபடல் வேண்டும்.
(5) காம சுகத்தை நுகர்வதிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்.

21. வியக்கபஜ்ஜ சூத்திரம் கூறும் போதனைகளின்படி 'போக சுக' என்பதை விளக்குவதற்கு மிகப் பொருத்தமான கூற்றாக அமைவது,
(1) சம்பாதித்த பெரும் செல்வம் உள்ளது எனும் மகிழ்ச்சி
(2) அறவழியில் சம்பாதித்த பெரும் செல்வம் உண்டெனும் மகிழ்ச்சி
(3) கடன் இல்லாமல் சம்பாதித்த பெருஞ் செல்வம் உண்டெனும் மகிழ்ச்சி
(4) சம்பாதித்த பொருளைப் பிறருக்காக மட்டும் செலவு செய்வதில் ஏற்படும் மகிழ்ச்சி
(5) சம்பாதித்த செல்வத்தை முறைப்படி நுகர்வதனால் ஏற்படும் மகிழ்ச்சி

22. ஏழ்மை என்பது சுகம் அனுபவிக்க விரும்பும் குடும்பஸ்தனுக்கு துக்கமளிப்பதாகும். அறவழியில் தேடிய செல்வம் ஒருவனை மகிழ்விக்கும் என்பதை புத்தசமயம் அங்கீகரிக்கின்றது. கிருஹஸ்த வாழ்வின் வெற்றிக்கு பொருளாதாரச் செழிப்பு மட்டுமன்றி பொருளாதாரப் பாதுகாப்பும் இன்றியமையாததொன்றாகும். பௌத்த மூலாதாரங்களுக்கு அமைவாக ஒருவர் தனது பொருளைப் பாதுகாப்பதற்காக கெட்ட நடத்தைகளிலிருந்து விலகி,
(1) மனைவியையும் பிள்ளைகளையும் போஷித்தல் வேண்டும்.
(2) சோம்பலின்றி செயற்படல் வேண்டும்.
(3) அறவழியில் பணம் சம்பாதித்தல் வேண்டும்.
(4) ஐந்து வகை யாகங்களைச் செய்தல் வேண்டும்.
(5) தன்னைப் போன்று மற்றவர்களையும் திருப்திப்படுத்தல் வேண்டும்.

23. பிக்கு, பிக்குணிகளின் உடற் செயற்பாட்டுத் தேவைகளை எளிதாக்குவதற்காக மலசலகூடங்களுக்கு அனுமதியளித்த புத்தர் அதற்குரியதான பழக்கவழக்கங்களை 'வச்சகுடிவத்த' என்பதன் மூலம் அறிமுகம் செய்திருந்தார். 'பச்சைப் புல்லுள்ள இடங்களிலும் நீரிலும் மலசலம் கழித்தலாகாது' என்பது இன்னொரு ஒழுக்க விதியாகும். இத்தகைய ஒழுக்க விதியை விதித்தமையினால் வெளிப்படுத்தப்படுவதாவது புத்தர்,
(1) பொதுமக்களின் குரலுக்கு செவி சாய்த்தமை
(2) சூழலைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தியமை
(3) பிக்குகளின் ஒழுக்கம் தொடர்பில் கவனம் செலுத்தியமை
(4) மற்றைய சமயக் கருத்துக்களுக்கு மதிப்பளித்தமை
(5) பிக்குகளின் உடற்செயற்பாட்டுத் தேவைகளைக் கவனத்திற் கொண்டமை

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


24. புத்தர் இயற்கையழகினைப் போன்று ஆக்க அழகியலையும் மதித்தார் என்பதற்கான சந்தர்ப்பங்களைச் சமய நூல்களிலினூடாகக் காணலாம். இங்கு கூறப்பட்ட இரண்டுவித அழகியலுள் ஆக்க அழகியலின் தோற்றத்திற்கான ஊடகமாகக் கருதத்தக்கது,
(1) ஆறு, குளம், அருவி
(2) பௌத்த தூபி
(3) காட்டு விலங்குகள்
(4) பெருங்காடுகள்
(5) மேகம்

25. புத்த சமயத்தின்படி இராச்சிய உரிமை தந்தை வழி உரிமை முறையாலோ அல்லது தெய்வ வரத்தினாலோ கிடைக்கப் பெறுவதொன்றல்ல. தீகநிகாயவின் அக்கஞ்ஞ சூத்திரம், பொதுமக்களின் இணைக்கப்பாட்டில் ஆட்சியாளர் நியமிக்கப்பட்டதாகவும் அவர் 'ராஜா' எனும் இன்னொரு பெயரினால் அழைக்கப்பட்டார் எனவும் குறிப்பிடுகின்றது. அங்கு 'ராஜா' எனும் சொற் பாவனை ஏற்பட்டது ஆட்சியாளன்,
(1) ஏளனப்படுத்த வேண்டியவர்களை ஏளனப்படுத்தி ஆட்சி செய்தமையால் ஆகும்.
(2) அவமானப்படுத்திக் காட்ட வேண்டியவர்களை அவமதித்துக் காட்டி ஆட்சிசெய்தமையால் ஆகும்.
(3) அகற்ற வேண்டியவர்களை அகற்றி ஆட்சி செய்தமையால் ஆகும்.
(4) நெல்வயல்களைப் பாதுகாத்து ஆட்சி செய்தமையால் ஆகும்.
(5) பிரஜைகளைச் சந்தோஷப்படுத்தி ஆட்சி செய்தமையால் ஆகும்.

26. ஒன்பது உயரிய புத்த குணங்களாலும் புத்தர் வாழ்வினாலும் முன்பிருந்த வேறு சிறந்த குணாம்சங்களாலும் புத்தரின் சிறப்பினை இனங்காண முடியும். புத்தரின் மாதிரி தலைமைத்துவம் கூட அவரின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகக் கொள்ளப்படலாம். இதனைத் தெளிவாகக் காட்டும் மிகச் சரியான கூற்றாவது,
(1) 'யதா வாதீ ததா காரீ யதாகாரீ ததா வாதீ' குண இயல்பு மூலமாகும்.
(2) 'திலோகுரு' என்றழைக்கப்படுதல் மூலமாகும்.
(3) 'உபாய கௌஸல்ய'த்துடன் சமயத்தைப் போதித்தல் மூலமாகும்.
(4) 'சந்தா தேவமனுஸ்ஸானங்' எனும் புத்த குணத்தின் மூலமாகும்.
(5) 'தாதீ' குண இயல்பு மூலமாகும்.

27. புத்தரிடத்து இருந்த விஷேடமான ஞானம் 'மகா பிரக்ஞாவ' என்று அறியப்படுவதால். அது,
(1) பக்கச்சார்பின்றி சமத்துவநிலையில் செயற்படுவதனால் தெளிவாகின்றது.
(2) சிஷ்யர்களின் திறமைகள், தகைமைகளைப் பாராட்டுவதனால் தெளிவாகின்றது.
(3) பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், வினாக்களுக்கு விடையளித்தல் முதலியவற்றால் தெளிவாகின்றது.
(4) தவறான நடத்தைகளால் சம்சார துக்கங்களுக்குட்பட்டோரை அதிலிருந்து மீட்பதற்கு முயற்சியெடுத்தமையால் தெளிவாகின்றது.
(5) 'இந்த தர்மமானது நுண்ணறிவுடையோர்க்குரியதல்லாது நுண்ணறிவில்லாதோருக்கு உரியதாகாது' எனப் போதித்தமையால் தெளிவாகின்றது.

28. "ஓ நண்பர்களே! கௌதமர் எனும் துறவி நற்பண்பாளர்; காம ராகங்களிலிருந்து விடுபட்டவர்; பலருக்கு குருவாயிருக்கிறார். ஆயிரக்கணக்கான கடவுளரும் பிரமாக்களும் இவரைச் சரணடைந்தனர்" என்ற சோணதண்ட பிராமணரின் கூற்றினால் வெளிப்படுவதாவது,
(1) புத்தரின் சமயப் பொறுமை
(2) புத்தரின் மகா ஞானம்
(3) புத்தரின் பெருங் கருணை
(4) புத்தர் பல மனிதர்களுக்கும் கடவுளருக்கும் குருவானமை
(5) புத்தருக்கு சமகாலத்திலிருந்த மதிப்பு

29. பல் சமய சமூகத்தில் தமது சமய அடையாளத்தைக் காப்பதுடன் சமய ஒற்றுமையுடன் வாழ்தலுக்கான பல உதாரணங்களை புத்தரின் வாழ்விலிருந்து காணக்கூடியதாயுள்ளது. புத்தரின் இன்னுமொரு சிறப்பம்சமாக அமைவது,
(1) புத்தரைக் கூடப் பரிசீலித்துப் பார்த்தல் வேண்டுமெனப் போதித்தமை மூலம் தெளிவாகின்றது.
(2) சுயமாகச் சிந்தித்துச் செயற்படுமாறு காலாமர்களுக்கு புத்தி கூறியமை மூலம் தெளிவாகின்றது.
(3) புத்தர், சூலசகுலுதாயீ என்பவரின் ஆச்சிரமத்திற்கு வருகை தந்தமை மூலம் தெளிவாகின்றது.
(4) கஸீபாரத்வாஜ பிராமணர் அறுவடை செய்த இடத்திற்கு தானம் பெறச் சென்றமை மூலம் தெளிவாகின்றது.
(5) ராத எனும் பிராமணரை சமயநிலைப்படுத்த ஏற்பாடு செய்தமை மூலம் தெளிவாகின்றது.

30. நவீன பிக்குகளுக்கு முன்பு எந்தவொரு ஒழுக்க விதிகளும் விதிக்கப்பட்டிருக்கவில்லையாயினும் பிற்காலத்தில் பத்து ஒழுக்க விதிகள் விதிக்கப்பட்டன. இவ்வாறு ஒழுக்க விதிகள் விதிக்கப்பட்டது,
(1) வண. சாரீபுத்தரின் வேண்டுகோளுக்கான பிரதிபலிப்பாகவாகும்.
(2) வண. முகலரின் வேண்டுகோளுக்கான பிரதிபலிப்பாகவாகும்.
(3) சுத்தோதன மன்னரின் வேண்டுகோளுக்கான பிரதிபலிப்பாகவாகும்.
(4) கோசல மன்னரின் வேண்டுகோளுக்கான பிரதிபலிப்பாகவாகும்.
(5) நவீன பிக்குகளினாலேயே வேண்டப்பட்டதற்கமைவாகவாகும்.

31. ஏனைய மதங்களின் செல்வாக்கினால் மழைக்கால வாசம் என்பது தோற்றம் பெற்றது. மழைக்கால வாசம் சம்பந்தமான வரையறை, சட்டம், ஒழுங்குகள் என்பன பற்றி விநய பிடகத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒழுக்கவிதிப்படி உபசம்பதா பிக்குகள் முன்னைய மழை வாசத்தைத் தொடங்க வேண்டியது,
(1) எஸல (ஜூலை) பூரணை தினம் கழிந்த முதல் நாளன்று
(2) எஸல பூரணை தினத்திற்கு முன்னைய நாளன்று
(3) பினர (செப்டெம்பர்) பூரணை தினத்திற்கு முன்னைய நாளன்று
(4) பினர பூரணை தினம் கழிந்த முதல் நாளன்று
(5) வப் (ஒக்டோபர்) பூரணை தினத்திற்கு முன்னைய நாளன்று

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

32. “பெரும்பாலான மக்களின் நன்மைக்காக சுற்றுலாவில் ஈடுபடுங்கள்” என்று தனது சிஷ்யர்களுக்கு அறிவுறுத்திய புத்தர், தாமும் உருவெலவிற்குச் சென்றிருந்தார். அவர் அங்கு சென்றது,
(1) உருவெல காசியப்பரின் வேண்டுகோளின் பேரிலாகும்.
(2) ஓய்வுச் சுகத்துடன் தங்கும் நோக்கத்துடனாகும்.
(3) ‘யதாவாதீ ததா காரீ’ குணத்திற்கேற்ப செயற்படுவதற்காகவாகும்.
(4) தியானத்தில் மனத்தை ஒருநிலைப்படுத்துவதற்காகவாகும்.
(5) உருவெல மக்களின் வேண்டுகோளுக்கமைவாகவாகும்.

33. விடுதலையை (முத்தி) தேடிச் சென்ற உபதிஸ்ஸ எனும் சந்நியாசி இந்திரியங்களை அடக்கியவரும் தெளிந்த தோற்றமுடையவரும் நல்வழியில் நடப்பவருமான வண. அஸ்ஸஜி என்பவரைச் சந்தித்தார். உபதிஸ்ஸரின் வினாக்களுக்கு விடையளித்த அஸ்ஸஜி தர்ம கொள்கையொன்றைப் பயன்படுத்தி விடுதலைக்கான மார்க்கத்தையும் உபதேசித்தார். அப்போது அஸ்ஸஜி போதித்ததாவது,
(1) நான்கு சீரிய உண்மைகள் பற்றிய தர்மம்
(2) மூன்று சிறப்பியல்புகளையுடைய போதனை
(3) மூவகைப் பயிற்சி பற்றிய போதனை
(4) படிச்ச சமுப்பாத போதனை
(5) நிப்பான மார்க்கம் தொடர்பான போதனை

34. இந்திய சாஸன வரலாற்றில் தேரவாதிகளின் தலைமையில் மூன்று பௌத்த சங்காயனாக்கள் நடந்ததாக பாளி மூலாதாரங்களும் வேறு பல மூலாதாரங்களும் தெளிவுபடுத்துகின்றன. சங்காயனா வரலாற்றைப் பொறுத்த வரையில் இவற்றுள் சரியான கூற்றாவது,
(1) முதலாம் சங்காயனாவின் பிரதிபலனாக நிகாய பேதம் ஆரம்பமானது.
(2) இரண்டாம் தர்ம சங்காயனாவின் பிரதிபலனாக அறுபதாயிரம் தீய ஒழுக்கமுடைய பிக்குகள் விலக்கப்பட்டனர்.
(3) இரண்டாம் சங்காயனாவின் பிரதிபலனாக புத்தர் போதித்த போதனைகளை வகைப்படுத்தி பாணக பரம்பரையினர் ஊடாக நடத்திச் செல்வதற்கு பொறுப்பளிக்கப்பட்டது.
(4) மூன்றாம் சங்காயனாவின் பிரதிபலனாக மறுசமய கண்டனங்களின் மூலம் சமயத்தை நந்நிலைப்படுத்தி கதாவத்துபகரண எழுதப்பட்டது.
(5) மூன்றாம் சங்காயனாவின் பிரதிபலனாக பத்தாயிரம் பிக்குகள் பிரிந்து சென்று வேறானதொரு நிகாயவை அமைத்தனர்.

35. புத்தர் தமது சிஷ்ய, சிஷ்யைகளது திறமைகளை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான சாசனம்சார் பல்வேறு பதவிகளை வழங்கினார். அவ்வாறு பதவி வழங்கப்பட்டது,
(1) பிம்பிசார மன்னின் வேண்டுகோளுக்கான பிரதிபலிப்பாகவாகும்.
(2) அது புத்தரின் கொள்கை என்பதனாலாகும்.
(3) வேறு சமயத்தலைவர்களும் அத்தகைய பதவிகளை வழங்கியிருந்தமையாலாகும்.
(4) பொது மக்களின் வேண்டுகோளுக்கான பிரதிபலிப்பாகவாகும்.
(5) பிக்குகளால் பதவிகள் வேண்டிக் கொள்ளப்பட்டதனாலாகும்.

36. நாலந்தா பல்கலைக்கழகம் புராதன இந்தியாவில் இருந்த புகழ்மிக்க கல்வி நிறுவனமொன்றாகும். மிகவும் முன்னேற்றகரமாகவும் ஒழுங்கு முறைப்படியும் கல்வி, நிர்வாகம் என்பவற்றை நடத்திச் சென்ற இப்பல்கலைக்கழகம் பல்வேறுபட்ட பொறுப்புக்களைக் கொண்ட பதவிகளையும் கொண்டிருந்தது. ‘த்வார பண்டித’ என்பது அத்தகையதொரு பதவியாகும். அந்தப் பெயரின் பொருளாவது,
(1) பல்கலைக்கழகத்தினுள் நுழையும், வெளியேறும் வாயிலுக்குப் பொறுப்பாக இருந்த பிரதான பிக்கு உத்தியோகத்தராவார்.
(2) நூலகத்திற்குப் பொறுப்பாக இருந்த பிரதான பிக்கு உத்தியோகத்தராவார்.
(3) நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்த பிரதான பிக்கு உத்தியோகத்தராவார்.
(4) மாணவர்களை அனுமதிக்கும் சபையில் பிரதான பதவி வகித்த பிக்கு உத்தியோகத்தராவார்.
(5) பல்கலைக்கழக வேந்தர் பதவியை வகித்த பிக்கு உத்தியோகத்தராவார்.

37. காஷ்மீரிலுள்ள குண்டல வன விகாரையில் நிகழ்ந்த நான்காவது பௌத்த சங்காயனாவிற்கு அரசு ஆதரவு வழங்கப்பட்டது,
(1) புஷ்யமித்ர மன்னனால்
(2) கனிஷ்க மன்னனால்
(3) ஹுவிஷ்க மன்னனால்
(4) மிலிந்து மன்னனால்
(5) சக்ராதித்ய மன்னனால்

38. பௌத்தத்துக்கு முற்பட்ட இலங்கையில் பல்வேறுபட்ட சமய நம்பிக்கைகள் நிலவின என்றும் பண்டுகாபய மன்னன் அதற்கு ஆதரவு அளித்தான் என்றும் புராதன ஆதாரங்கள் காட்டுகின்றன. அதற்கமைவாக மேற்குப் பக்க வாயில் அருகே ஆலமரமொன்று வாசஸ்தலமாக ஒதுக்கப்பட்டிருந்தது,
(1) வைசிரவணருக்கு
(2) வியாத தேவருக்கு
(3) கம்மார தேவருக்கு
(4) சித்தராஜ யக்ஷனுக்கு
(5) காலவேல யக்ஷனுக்கு

39. மகாவிகாரை இலங்கையின் தேரவாத பௌத்த நிலையமாகும். மகாவிகாரை ஆற்றிய தேசிய, சமயப் பணிகள் மிக அதிகமானவை. தேரவாத திரிபிடக இலக்கியத்தை அபிவிருத்தி செய்தமை அவற்றுள் முக்கியமானது. மேலும் தேரவாத திரிபிடகத்திற்கு உரைகளை தேசிய, பிறநாட்டு பிக்குகளைக் கொண்டு எழுதுவித்தமை மிகப் பெரிய செயற்பாடாகும். இதற்காக தலைமை வழங்கிய பிரபல்யமான வெளிநாட்டு பிக்குவானவர்
(1) வண. மகாசுமண
(2) வண. மகாபதும
(3) வண. சூலாபய
(4) வண. சூலநாக
(5) வண. தம்மபால

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk


40. புராதன இலங்கையில் ஆராமையை கேந்திரப்படுத்திய கல்வி நிலையங்களாக பிரசித்தமான அஷ்ட மூலாயதனங்களுள் சில, மகாவிகாரையுடனும் இணைக்கப்பட்டிருந்தன. அதேநேரம் வேறு சில அபயகிரியுடன் இணைக்கப்பட்டிருந்தன. இதன்படி, விஜயபாகு மன்னனால் அபயகிரியுடன் இணைந்ததாக அமைக்கப்பட்ட மூலாயதனமாகக் கருதப்பட்டது,
(1) வில்கம் மூல (2) கபார மூல (3) தகஷிண மூல (4) உத்தர மூல (5) மஹ நெத்பா மூல

41. பௌத்த அரசியல் கொள்கையின்படி ஆட்சியாளர், பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு மதிப்பளிக்க வேண்டும். இந்தப் போதனைப்படி இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்களும் செயற்பட்ட வகையினை வரலாற்றுத் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. அழிக்கப்பட்ட மகா விகாரையை மீண்டும் கட்டியெழுப்பியமை இதற்கு ஓர் உதாரணமாகும். அதற்கு உதவிய ஆட்சியாளர்,
(1) கோதாபய மன்னன் (2) மகாசேன மன்னன் (3) ஜெட்டதிஸ்ஸ மன்னன்
(4) தாதுசேன மன்னன் (5) வலகம்பா மன்னன்

42. பத்து வருடங்கள் வரையில் இலங்கையில் புத்த சமய ஒழுக்கத்தைக் கற்று பர்மாவிற்குச் சென்று 'ஸீகலசங்க' எனும் பெயருடைய நிகாயாவொன்றை நிறுவி பர்மாவின் புத்தசமய போஷிணைக்காகச் செயற்பட்ட வண. சப்பட இலங்கைக்கு வந்த காலமாவது,
(1) அனவ்ரத மன்னன் காலம் (2) தம்மசேத்திய மன்னன் காலம் (3) போதவ்பயா மன்னன் காலம்
(4) மின்டொங் மன்னன் காலம் (5) கெயங்சித்த மன்னன் காலம்

43. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் த்வாரவதீ ராச்சியத்தில் புத்தமதம் செழிப்பாக நிலவியிருந்தமை பற்றி பிரபலமான சீன பிக்கு யாத்திரிகரான ஹியுங் ஸியாங் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் கருதப்படக்கூடியது,
(1) யப்பானில் புத்தமதம் செழிப்படைந்திருந்தது. (2) சீனாவில் புத்தமதம் செழிப்படைந்திருந்தது.
(3) பர்மாவில் புத்தமதம் செழிப்படைந்திருந்தது. (4) இந்தியாவில் புத்தமதம் செழிப்படைந்திருந்தது.
(5) தாய்லாந்தில் புத்தமதம் செழிப்படைந்திருந்தது.

44. இந்தியாவில் பௌத்த நூல்கள் அழிவடைந்து புத்தமதம் அழிந்து போகும்போது அதிகளவிலான மகாயான பௌத்த சமய நூல்களையும் ஹீனயான குருகுலத்துக்குச் சொந்தமான சில சமய ஒழுக்க நூல்களையும் மொழிபெயர்ப்பித்துப் பாதுகாத்து வைப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்ட நாடு,
(1) சீனா (2) தாய்லாந்து (3) யப்பான் (4) இலங்கை (5) பர்மா

45. "மும்மணிகளுக்கு எல்லோரும் மதிப்பளிக்க வேண்டும்" எனும் கூற்றினைப் பிரகடனப்படுத்தி அரசியல் யாப்பின் மூலம் புத்த தர்மத்தை யப்பானில் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டு அரச சமயமாக ஆக்கியவர்,
(1) கிம்மெயி சக்கரவர்த்தி (2) யோமெயி சக்கரவர்த்தி (3) ஷோதொரு சக்கரவர்த்தி
(4) ஷேர்மு சக்கரவர்த்தி (5) கம்மு சக்கரவர்த்தி

46. 'நர தயிபுத்ஸு' (Nara Daibutsu) என்பது,
(1) யப்பான் புத்த பிரதிமை (2) யப்பானிய பௌத்த விழா (3) யப்பானின் பூக்கலை
(4) யப்பானின் பௌத்த நாடகம் (5) யப்பானின் பௌத்த தலைவன்

47. புத்தர் பரிநிர்வாணமடைந்து ஐந்து நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் கூட புத்தச் சிலை அமைக்கப்படவில்லை என்பது தொல்பொருளியலாளர்களின் கருத்தாகும். ஆனால் புத்தர் வாழ்ந்த காலத்திலேயே புத்த சிலையொன்றை சிற்பிகள் நிர்மாணித்திருந்தமை பற்றி மூலாதாரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மூலாதாரமாவது,
(1) மனோரத பூரணி (2) மிலிந்த பிரஸ்ன (3) மகாவம்சம்
(4) கோசல பிம்ப வர்ணனா (5) சமந்தபாசாதிகா

48. "ஓ ஆனந்தரே! தூபியொன்றை அமைத்து வழிபடுவதற்கு நால்வர் ஏற்றவர்களாயுள்ளனர். அவர்கள் சம்யக் சம்புத்த அரகத்தர், பச்சேக புத்தர், அரஹந்தர், சர்வதேச சக்கரவர்த்தி ஆகியோர் ஆவர்." இந்தக் கூற்று அமைந்துள்ள சூத்திரமாவது,
(1) தீக நிகாயாவின் மகாபதான சூத்திரம் (2) தீக நிகாயாவின் மகாநிதான சூத்திரம்
(3) தீக நிகாயாவின் மகா சதி பட்டான சூத்திரம் (4) தீக நிகாயாவின் மகாபரிநிப்பான சூத்திரம்
(5) தீக நிகாயாவின் மகாசுதஸ்ஸன சூத்திரம்

49. இலங்கையிலுள்ள நிற்கும் நிலைச் சிலைகளுள் பரவலாகக் காணப்படும் முத்திரையாவது,
(1) அபய முத்திரை (2) வரத முத்திரை (3) தர்மசக்கர முத்திரை
(4) விதர்க முத்திரை (5) பரதுக்க துக்கித முத்திரை

50. இலங்கைக் கலைஞர்களின், படைப்பாற்றலை வெளிப்படுத்தும் சந்திரவட்டக்கல்லில் உள்ளடங்கியுள்ள பல்வேறுபட்ட குறியீடுகளினால் பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவதாக அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இவற்றுள் எல்லா சந்திரவட்டக்கற்கலையும் பற்றிய பேராசிரியர் செனரத் பரணவிதானவின் கருத்து, அவை
(1) நிர்வாணத்தைக் குறிப்பது (2) நாற்றிசைகளையும் குறிப்பது
(3) செழிப்பைக் குறிப்பது (4) சம்சார சக்கரத்தைக் குறிப்பது
(5) நாற்றிசையிலுமிருந்து வருகை தரும் அனைவருக்கும் பொதுவான இடத்தைக் குறிப்பது

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

AL/2016/45/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

45 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* **பகுதி I** இல் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் வீதம் உரித்தாகும்.

## பகுதி I

1. (i) சதுர்வர்ண அமைப்பில் சத்திரிய வர்ணத்தினருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஸ்வதர்மங்களைச் சரியாகப் பெயரிடுக.
   (ii) பிராமண போதனைகளில் குறிப்பிடப்படும் 'ஆபத் தர்ம' என்பதனை அறிமுகப்படுத்துக.
   (iii) பிராமண சமய மரபில் பெண்கள் ஆணாதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர் என்பதற்கான **மூன்று** ஆதாரங்களை எடுத்துக்காட்டுக.
   (iv) சஞ்சய பெல்லட்டிபுத்த என்ற சமயப் போதகரின் போதனைகளைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.
   (v) கி.மு. ஆறாம் நூற்றாண்டில் மகத தேசத்தில் நிலவிய நிர்வாக கட்டமைப்பை அறிமுகப்படுத்துக.

2. (i) பௌத்த மூலாதாரத்தின்படி பிராமண வர்ணத்தின் தோற்றம் எவ்வாறு ஏற்பட்டதென்பதை விளக்குக.
   (ii) பௌத்த கால இந்தியாவில் நிலவிய, தனிப்பட்டவரின் சுதந்திரத்திற்குப் பாதிப்பாக அமைந்திருந்த சமய போதனைகள் **இரண்டினை** அறிமுகப்படுத்துக.
   (iii) 'ஸப்த அபரிஹானீய தர்மங்களைச்' சரியாகப் பெயரிடுக.
   (iv) 'சதர சங்கிரக வஸ்து'களுள் அடங்கும் 'ப்ரிய வசன' (இனிய வார்த்தை) என்பது பற்றிய சமய ரீதியான விளக்கத்தைத் தருக.
   (v) சிகாலோவாத சூத்திரம் குறிப்பிடும் 'உட திசாவ்'வினால் விபரிக்கப்படும் சமூகக் கூட்டுறவுக்குரியதான பொறுப்புகளும் கடமைகளும் பற்றி எடுத்துக்காட்டுக.

3. (i) 'பிக்கு சங்க', 'ஸாவக சங்க' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்துக.
   (ii) பராபவ சூத்திரத்தின்படி ஒருவரின் வீழ்ச்சிக்கு ஏதுவாகும் **எட்டு** விடயங்களைப் பெயரிடுக.
   (iii) பத்து புண்ணியச் செயல்களைப் பெயரிட்டு, 'வெய்யாவச்ச' என்பதனைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.
   (iv) புத்த சமயத்தில் 'அமூலிகா சிரத்தா' பெறும் இடம் பற்றி விளக்குக.
   (v) ஒருவரின் மனவழுத்தம் அதிகரிப்பதற்கு 'மஹிச்சதா' ஏதுவாகும் தன்மையினை விளக்குக.

## பகுதி II

4. (i) புத்தரின் வாழ்க்கை வெளிப்படுத்தும் நேர முகாமைத்துவ அம்சங்களை தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையின் வெற்றிக்குப் பயன்படுத்தக்கூடிய விதத்தை விளக்குக.
   (ii) இயற்கை அழகு சம்பந்தமாக அரகத்தர்களின் மதிப்பீட்டினை **இரண்டு** உதாரணங்கள் மூலம் ஆராய்க.
   (iii) ஆக்கபூர்வ அழகியல் தோற்றத்திற்கு அறவழி ஓய்வு உதவுமாற்றை எடுத்துக்காட்டுக.
   (iv) புத்த சமயம் போதிக்கும் 'பிரக்ஞா' (ஞானம்) பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

5. (i) 'வர்த்தகம்' அறவழி ஜீவனோபாயமாவது எவ்வாறு என்பதை பௌத்த நியாயங்களுக்கமைய விளக்குக.
   (ii) 'ஏழ்மை' வெற்றி கொள்ளக்கூடியதொரு சமூகப் பிரச்சினை என்பதனைப் பௌத்த போதனைகளின் உதவியுடன் உறுதிப்படுத்துக.
   (iii) 'செல்வம், சேகரித்து வைத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றல்ல, அது நுகர்வுக்குட்படுத்தப்பட வேண்டியதொன்று' என்பதை எடுத்துக்காட்டுக.
   (iv) 'மகிழ்ச்சி' பற்றிய பௌத்த போதனைகளைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**6.** (i) புத்தரின் வரலாறு வெளிப்படுத்தும் நன்றியுடைமையை (க்ருதவேதீ குண) நவீன சமூகத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தை எடுத்துக்காட்டுக.

(ii) துன்பத்திற்குட்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான அர்ப்பணிப்பில் புத்தரின் உயர் கருணைக் குணத்திலிருந்து பெறக்கூடிய நல்ல விடயங்களை விளக்குக.

(iii) புத்தரின் சமயோசிதமாகச் செயற்படும் குணாம்சத்திலிருந்து தற்காலச் சமூகம் பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரிகளை எடுத்துக்கூறுக.

(iv) 'புத்தசமயத்தில் குறிப்பிடப்படும் சுதந்திர சிந்தனை பொறுப்பற்றதொன்று அல்ல.' ஆராய்க.

**7.** (i) புத்தர் கால சமயப் பிரசார சேவையின் வெற்றிகரமான நிலைக்கு 'சிராவக சங்கத்தினர்' ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

(ii) 'தர்ம சங்காயனா' என்றால் என்ன என்பதை அறிமுகப்படுத்தி, முதலாவது தர்ம சங்காயனா தொடர்பான மூலாதார தகவல்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(iii) புத்த சாசன நிலைபேற்றிற்கு கனிஷ்க மன்னன் ஆற்றிய சேவைகளை மதிப்பிடுக.

(iv) இலங்கை அரசர்களின் ஆத்மீக நிலை புத்த தர்ம விழுமியங்களினால் போஷிக்கப்பட்ட விதத்தினை உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

**8.** (i) தாய்லாந்து மக்களின் வாழ்விற்கு புத்த சமயத்தின் மூலம் கிடைத்த நன்மைகளை எடுத்துக்காட்டுக.

(ii) புத்த சிலைகள் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் புத்தரைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட குறியீடுகளை உதாரணங்களுடன் வெளிப்படுத்துக.

(iii) பௌத்த விழுமியங்களைச் சமூகமயமாக்குவதற்கு ஓவியக்கலை முக்கிய ஊடகமாக அமைந்தவாற்றை எடுத்துக்காட்டுக.

(iv) இலங்கையின் நாடகக்கலை அபிவிருத்திக்கு புத்த சமயத்தின் மூலம் கிடைத்த செல்வாக்கினை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

***

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk